9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ.) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள்— தொடர்ச்சி

(ஐ.) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்." என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் உள்ள கேள்வி—"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

In clause 2,—

(a) for sub-clause (1), substitute the following sub-clauses, namely:—

"(1) in sub-section (1-A), for the expression "three hu and fifty rupees per mensem", the expression "four hu rupees per mensem, shall be substituted; d

---

*1981ம் ஆண்டு மே மாதம் 11ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(2) in sub-section (4-B), for the expression "telephone allowance of one hundred and fifty rupees per mensem irrespective of the fact whether he has any telephone or not" the following shall be substituted, namely:———

"telephone allowance of—

(a) (i) one hundred and fifty rupees per mensem with effect on and from 1st July 1980; and

(ii) two hundred and fifty rupees per-mensem witheffect on and from the 1st May 1981,

if he has a telephone at his residence;

two hundred rupees per mensem with effect on and fro the 1st July 1980 and

(ii) three hundred rupees per mensem with effect on and from the 1st May 1981,

if he has no telephone at his residence.";

(b) re-number sub-clause (2) as sub-clause (3).

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In clause 1, for sub-clause (2), substitute the following sub-clause. namely:—

(2) (i) clause (1) of Section 2 shall be deemed to have come into force on the 1st May 1981.

(ii) clause (3) of section 2 shall be deemed to have come into force on the 1st July 1980.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிரிவு 1. திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 13-5–1981 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6.56க்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

எதுவுமில்லை

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

208. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 501 முதல் 620 வரை).

209. மீனளத் துறையின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் (ஏழாவது சட்டமன்றப் பேரவை) நான்காவது அறிக்கை (தமிழ்).

210. எழுதுபொருள் அச்சுத்துறைப் பற்றிய 1980–81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் (ஏழாவது சட்டமன்றப் பேரவை) ஐந்தாவது அறிக்கை (தமிழ்).